






# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஶ்ரீ ப ரா வி

மலர் 1 இதழ் 41 8.10.2025



ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய
## முத்துக்கள்
## உபதேசங்கள்



# முத்துக்கள்

## அஷ்டாக்ஷரம்

- அஷ்டாக்ஷரம் மூலம் நல்ல ஆத்மகுணங்களைப் பெறலாம்; ஆத்மகுணங்கள் வரவில்லை என்றால், அஷ்டாக்ஷரத்தில் தேவையான ஊற்றம் இல்லை என அறியவும்.
- அஷ்டாக்ஷரம் மூலம் எல்லாவிதமான செல்வமும் பெறலாம்; செல்வம் சேரவில்லை என்றால், அதற்குக் காரணம் அஷ்டாக்ஷரத்தில் போதிய கவனம் இல்லை என்பதுதான்.
- அஷ்டாக்ஷரம் மூலம் மோக்ஷத்தையே பெறலாம்; இப்போது பெற முடியாததற்குக் காரணம் நாம் அதனை விரும்பிக் கேட்காததால்.
- திருமந்தரத்தில் தெளிவு பெறாதவன் பல ஸாஸ்த்ரங்கள் படித்திருந்தாலும் குறைவுபட்டவன்.
- திருமந்தரத்தில் தெளிவு பெற்றவன் பல ஸாஸ்த்திரங்களைப் படிக்காவிட்டாலும் நிறைவு பெற்றவனே.
- திருமந்தரத்தின் கருத்து அறிபவன் அடுக்கு மாடியில் மேல் இருப்பவன்; அதை அறியாதவர்கள் கீழே தரையில் இருப்பவர்கள். மேலே இருப்பவன் கீழே இருப்பவர்களை மிகச் சிறிய உருவில் பார்ப்பான்; அதுபோல திருமந்த்ரப் பொருள் அறிந்தவன் ஜஞானம் எனும் மாடியில் நின்றுகொண்டு கீழே இருப்பவர்களை அற்பமாகப் பார்க்கிறான்.
- திருமந்தரத்தின் கருத்து அறியாதவன் மிருகத்துக்கு சமம் ஆனவன். ஏனெனில், ஆத்மாவை அறியாமல் மிருகம் போல உடலுக்கே வாழ்பவன்.
- திருமந்த்ரமானது, நம்மைப்பற்றி நமக்கே தெரியப்படுத்தும் கண்ணாடி: பல ரத்னங்களை உள்ளக்கடக்கிய பேழை: செல்வம் மறைந்திருக்கும் நிதிப் புதையல்; தினமும் பருகி அனுபவிக்க வேண்டிய அமுதம்.

************************************************************************

# த்வயம் - பெருமைகள்

1. இது சரணாகதி மந்த்ரம் ஆகும். அதாவது பெருமாளிடம் சரணாகதி செய்வதற்கு ஆன மந்த்ரம் இது.

2. சரணாகதி மந்த்ரங்கள் பல உள்ளன. ஆனால் அவற்றில் இந்த த்வயமந்திரம் விசேஷமானது; ஏனெனில், இது சரணாகதியைப் பற்றியும் சரண்யன் ஆகிற பெருமாளையும், பலனையும் மிகத் தெளிவாகக் காட்டுகிறது.

3. நம் ஆசார்யர்கள் அனைவரும் இந்த மந்த்ரத்தையே சரணாகதி மந்த்ரமாக ஏற்றனர். அதனாலும் நமக்கு இது விசேஷமானது.

4. த்வய -மந்த்ரமே கூட வேறொன்றும் உள்ளது. அதற்கும் இதே போல பொருள் உண்டு. ஆனால் அதை விட இதுவே நம் ஆசார்யர்கள் மிக உகந்தது.

5. இதை ஒரு தடவை சொன்னாலே மோக்ஷம் வரை பலன் அளிக்கும். இது இந்த மந்த்ரத்தின் தனிப் பெருமை ; இதில் காரணம் கேட்டு வாதம் செய்யக் கூடாது.

6. நமக்கு மோக்ஷத்தை விட அதிக நலன் எதுவும் கிடையாது; அந்த நலன் பயப்பதில் த்வயத்தை விட சிறந்தது எதுவும் இல்லை.

7. இந்த மந்த்ரத்தில் ஈடுபாடு கொள்ளும் மனிதன் மிக அபூர்வம் ஆனவன் என்று ஆகமம் சொல்கிறது. ஏனெனில், தன் ஸ்வரூபம் உணர்ந்து, ஸம்ஸாரத்தில் வெறுப்புற்று. பகவானிடம் மஹாவிச்வாஸம் பிறந்து, சரணாகதி செய்யத் துணிபவன் ஒருவன் கிடைப்பது அரிது. அப்படிப்பட்டவனுக்குத்தான் இந்த மந்த்ரத்தின் அருமை பெருமை புரியும்.

*****************************************************************************

## ப்ரபத்தியின் ஐந்து அங்கங்கள்

ப்ரபத்தியின் ஐந்து அங்கங்களான ஆநுகூல்ய ஸங்கல்பம், ப்ராதிகூல்ய வர்ஜனம், மஹாவிஸ்வாஸம், கோப்த்ருத்தவ வரணம், கார்ப்பண்யம் என அநுசந்தானம் பண்ணிக்கொண்டு இருக்க வேண்டும்.

1. ஆநுகூல்ய ஸங்கல்பம் - எம்பெருமான் திருஉள்ளத்துக்கு உகந்தவற்றையே செய்ய உறுதி கொள்ள வேண்டும்.

2. ப்ராதிகூல்யவர்ஜநம் செய்யாமலிருத்தல் எம்பெருமான் திருவுள்ளத்திற்க்கு எதிரானவற்றை

3.மஹாவிஸ்வாஸம் - அவன் நம்மை கட்டாயம் ரக்ஷிப்பானென்று நம்ப வேண்டும்.

4. கார்ப்பண்யம்: பக்தியோகமாகிய கைம்முதல் இல்லாமையை அனுஸந்தித்து, எம்பெருமானுடைய கிருபை உண்டாகுமாறு தாழ்ந்து நிற்றல்

5. கோப்த்ருத்தவ வரணம் - பக்தியோகம் முதலான உபாயங்களை அநுஷ்டிக்க தகுதி யில்லாததால் எம்பெருமானுக்கு நம்மீது கருணை வரும்படி சேவித்துக்கொண்டு இருத்தல், ஆகிய ஐந்தையும் அநுசந்தானம் பண்ணவேண்டும் என ஸ்வாமி தேசிகன் சாதிக்கின்றார்.

************************************************************************

## திருவடிகளின் மஹிமை

ஸ்வாமி ஸ்ரீதேசிகனது திவ்ய சூக்திகளில் திருவடிகளின் மஹிமையை கொண்டாடுகிறார்:

"உறு சகடமுடைய ஒரு காலுற்றுணர்ந்தன........விடலரிய பெரிய பெருமாள் மெய்ப்பதங்களே" (ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்)

- சகடாஸுரனை சாடியது;
- இரு மருதமரங்களிடையே ஊடுருவிச்சென்று குபேர குமாரர்களுக்குச் சாபவிமோசனம் அருளியது;

- உரலில் கட்டுண்டு தாமோதரனானபடி;
- பாண்டவ தூதனாய் ஹஸ்தினாபுரம் சென்றது;
- கண்ணனாக ப்ருந்தாவனத்தில் ஒரு இடங்கூடவிடாமல் கால் இலச்சினைபட கல்லிலும் முள்ளிலும் நடந்து சென்றது:
- பெரிய பிராட்டியார் திருக்கரஸ்பர்சத்திலும் சிவந்து போகும்படியான சௌகுமார்யம்;
- மறுபிறவியை அறுக்கும்படியான தன்மை; விஜயனுக்கு ஸாரதியாகி அவனுக்கு ஸாரத்யம் செய்தது;
- ஸ்ரீரங்கவிமானத்தில் கோயில் கொண்டமை;
- காளியன்முடியில் நடனமாடியது;
- ஸ்வாமி நம்மாழ்வாரின் திருவாய்மொழியாக வெளிப்படுத்தாமை;
- கரிக்கட்டையான குழந்தையை குமாரனாக பரீக்ஷித்தாக்கிய அதிசயம்;
- அஸுரர் படை குலை நடுங்க யுத்தம் செய்தமை;

இவையும் சிலவே. இப்பேற்பட்ட ஸ்ரீரங்கநாதனாகிய பெரிய பெருமாளின் திருவடிகள் மேன்மையானவை.

*****************************************************

